உ

பரமபதிதுணை.

பூவுலகெங்கும்

திருடசிங்கமெனப் புகழ்வாய்ந்த

**R. நடராஜாச்சாரி அவர்களும்**

கள்ளச்சரபம்

**K. K. தங்கவேலுப்பிள்ளை அவர்களும்**

பாடியாடி வருகின்ற

வர்ணமெட்டுகளடங்கிய

---

# போட்டா போட்டி கள்ளப்பாட்டு!

---

தமிழ் நாடெங்கும் புகழ்பெற்ற மஹாவித்வான்

**T. T. சங்கரதாஸ்சுவாமியவர்கள்**

மாணவரான சந்தச்சரபம்

**ஷண்முகதாஸ் அவர்கள்**

இயற்றியது.

---

**T. கிருஷ்ணசாமி பிள்ளை & பிரதர்,**

புக்ஸெல்லர் & ரப்பர் ஸ்டாம்பு மேக்கர்,

புதுமண்டபம், மதுரை.

காபிரயிட் ரிஜிஸ்டர்டு] 1924 [விலை அணா 2.

ஷம்ஸியா பிரஸ், மதுரை-24-

892MSD,f
N29.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகல கனதனவான்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்கும் புத்தகங்களை அச்சிடுவோர்களுக்கும் வெளியிடுவோர்களுக்கும் தெரிவித்துக் கொள்வதாவது:-

"போட்டா போட்டி கள்ளப்பாட்டு" என்ற தலைமைப் பெயருள்ள இப்புத்தகத்தை இந்திய காபிரயிட் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்திருப்பதால் மேற்சொல்லிய தலைமைப் பெயரையாவது அல்லது இதிலுள்ள பாடல்களில் எதையாவது எவராவது எமது உத்திரவின்றி அச்சிடுவாராகில் அதனால் எமக்கு நேரிடும் சகல நஷ்டங்களுக்கும் ஷையார்கள் பாத்தியப்படுவார்கள். அன்றியும் இந்தியன் காபிரயிட்டை உல்லங்கனம் செய்த குற்றத்திற்கும் ஆளாவார்கள்.

இங்ஙனம்,

டி. கிருஷ்ணசாமி பிள்ளை & பிரதர்,

புத்தக வியாபாரம்,

மதுரை.

குறிப்பு:— இதின் 2ம் பாகம் அச்சிலிருக்கிறது கூடிய சீக்கிரம் வெளி வரும் விலை 0-2-0

உ

பரமபதி துணை.

# போட்டா போட்டி

# கள்ளப் பாட்டு.

விநாயகர் காப்பு.

894.8111
2903

பின் முடுகு வெண்பா.

மண்ணுறும் வன்மையுள்ள மாஜாலக் கள்ளர்மேற்
பண்ணுறுஞ் செந்தமிழைப் பாடுதற்கு—உண்ணுத
பானைவயி றானைமுக மானசிவ ஞானகுரு
தானந்தன கானவிசை தா

இரண்டு திருடர்களின்

## போட்டா போட்டி சாமர்த்தியம்

(முதற்கள்ளன்)

தெற்குத்திக் கள்ளனடா என்ற மெட்டு.

கொல்லிமலைக் கள்ளனடா அப்பாடா நான் குறவர்களின் கூட்டமடா
குறவர்களின் கூட்டமடா குறவர்களின் கூட்டமடா
கூட்டமடா என்றுஞ்
ஜல்லி என்ற நிம்பரிலே முதல் முதல் ஸாம்பில் காட்ட வந்தவண்டா
ஸாம்பில் காட்ட வந்தவண்டா ஸாம்பில் காட்ட வந்தவண்டா
ஜபக்லங்கடி ஜபக்லங்கடி
ஜபக்லங்கடி மேலமேலா நைனு ஜபக்லங்கடி மேலமேலா சாமி
ஜபக்லங்கடி மேலமேலா கணக்கா ஜபக்லங்கடி மேலமேலா இந்த
ஜபக்லங்கடி வரிசை போட்டுச் சலாம் வாங்கினேன் பாபட்டா
சலாம் வாங்கினேன் சபைமுன் சலாம் வாங்கினேன்

(இரண்டாங் கள்ளன்)

தோகமலைக்கள்ளனடா அய்யாடா நான் சோரம்பண்ணுந் தேசமடா
சோரம்பண்ணுந் தேசமடா சோரம்பண்ணுந் தேசமடா
தேசமடா பணப்

பாகமென்ற மூட்டைகளை அடித்திங்கு பறிக்கவந்த தீரனடா
பறிக்கவந்த தீரனடா பறிக்கவந்த தீரனடா
அச்சாலங்கடி அச்சாலங்கடி

அச்சாலங்கடி லேலோ ராஜா அச்சாலங்கடி லேலோ ஜோக்கா
அச்சாலங்கடி லேலோ துரையே அச்சாலங்கடி லேலோ இப்படி
அச்சாலங்கடி யுடான் வாங்கி அஞ்சாமல் பணிந்தேன் குதித்து
அஞ்சாமல் பணிந்தேன் குதித்து அஞ்சாமல் பணிந்தேன்

(முதற் கள்ளன்)

பூந்தமலைக் கள்ளனுக்கு ராஜா நான் பொன்கொடுத்த போவன்னுடா
பொன்கொடுத்த போவன்னுடா பொன்கொடுத்த போவன்னுடா
போவன்னுடா வல்லக்

காந்தமென்னும் பூட்டுடைத்துக்கையால் சபோட் பண்ணுவண்டா
கையால் சபோட்பண்ணுவண்டா கையால் சபோட் பண்ணுவண்டா
அலேக் லங்கடி அலேக் லங்கடி

அலேக் லங்கடி லேலோ குமுக்கா அலேக் லங்கடி லேலோ சமுக்கா
அலேக் லங்கடி லேலோ அமுக்கா அலேக் லங்கடி லேலோ இங்கே
அலேக் லங்கடி டப்பாப் பாடி அரட்ட வந்தேனுன் ஜனத்தை
அரட்ட வந்தேனுன் மனத்தை அரட்ட வந்தேனுன்

(இரண்டாங் கள்ளன்)

அழகமலைக் கள்ளனுக்கு நைனு நான் அண்ணனென்ற சிங்கமடா
அண்ணனென்ற சிங்கமடா அண்ணனென்ற சிங்கமடா
சிங்கமடா என்றும்

பழகிடாதவூரில் பட்டப்பகலில் பருத்த கொள்ளை செய்வேனடா
பருத்த கொள்ளை செய்வேனடா பருத்த கொள்ளை செய்வேனடா
அபேஸ் லங்கடி அபேஸ் லங்கடி

அபேஸ்லங்கடி லேலோ கபர்தார் அபேஸ்லங்கடி லேலோ தருக்கா
அபேஸ்லங்கடி லேலோ மினுக்கா அபேஸ்லங்கடி லேலோ சொல்லும்
அபேஸ் லங்கடி கணக்கு [illegible] ஆட வந்தேனே தேட்டை
போட வந்தேனே மூட்[illegible] தேட வந்தேனே

### வசனம்

என்ன எங்கப்பனே எங்க நைனா நம்ப ஊரிலே ரொம்ப பேரு திர்றப்போனுங்க பாத்துக்கோ சாமி அதிலே போயி நானு பங்கு கேக்கபோனேன் ராஜா அவனுங்கசொன்னனுங்க இன்னாப்பனே மெள்ள வந்து நம்பகிட்டதானே சேரக் பண்ணி ஒட்டரையே என்னுபுட்டு குடுத்தானுங்க வொரு ரப்பேட்டா அதை வாங்கிக்கினு அப்படியே ஒருசபேட்டா ஒண்ணு குடுத்தேம் பார்த்தக்கோ நானு அதிலேயே அந்த மனுசன் டிங்கி டிமாஞ்சி, சுண்டு சுருளாயி, அண்டு அருளாயி, அவனுயிரு சுடுகாடு போயி கிருகிருகிருனு கீயேவுயிந்து செத்து போனான் பாத்துக்கோ தானே நானு பாத்து பயந்துகினு ஓடியே வந்திட்டேனிங்கே ராபிட்டா.

### (முதற் கள்ளன்)

20 MAY 1924

ஐயூ எங்கப்பா எங்கராஜா நம்ப ஊரிலே சொம்ப பேரு திருட்டு பசங்க ஆயி பூட்டாங்க என்னுப்புட்டு அப்படியே ஒரு சந்திலே பூந்து பொந்திலே ஏறி சப்பாத்திபுதார்லே நொயஞ்சி ஒரு சால் பண்ணி ஒரு சமக் பண்ணி ஒரு உடான் பண்ணி ஒரு உல்டி பண்ணி ஒரு அபோஸ் பண்ணி ஒரு அலேக்பண்ணி ஒரு சபோட் பண்ணி ஒரு சரேட் பண்ணி ஏறி வந்துட்டேட நைனா இங்கே ஜோக்கா அப்படி இங்கே வந்தும் என் வயித்துக்கு ஒண்ணுமாப்புடலே ராஜா இருக்கட்டும் நம்பசாமிகளை கொஞ்சம் வேண்டுகிறே நானு.

### மேற்சொன்ன மெட்டில் பின்மகுட சந்தம்

வயிறு பெருத்தவனே வள்ளி கணவன் றமையா
பயறு கடலைபுண்ணும் பாகனே
பாகனே யூகனே யோகனே வாகனே
பரமதயாளா வேண்டும் வரமருள் தோளா

### (இரண்டாங் கள்ளன்)

பானை வயித்தோனே பகர் குறத்திக் காத்தானே
ஆனை முகம் புனைந்த ஐயனே
ஐயனே மெய்யனே துய்யனே கையனே
ஆண்டருள் தேவா இன்பம் பூண்டிடக்கோவா

(முதற் கள்ளன்)

மாமீட திக்கிமைத்துனனே மத்தடியைக் கொண்டவனே
ஆட்டோட்டியே திரிந்த ஆயனே
ஆயனே நேயனே மாயனே தூயனே
ஆதிமூலனே வல்ல நீதிஞாலனே

(இரண்டாங் கள்ளன்)

மண்ணையுண்ட செவ்வாயரனே மலையைச்சுமந்தவனே
கண்ணனெனப் பேர் புனைந்த கத்தனே
கத்தனே சித்தனே சுத்தனே முத்தனே
களவுக்கிந்நேரம் நீ வந் துளவிருவோரம்

(முதற் கள்ளன்)

கஞ்சாக் குடித்தவனே கந்தப்பனை யீன்றவனே
எண்சாணுடற்குள் வாழுமீசனே
ஈசனே நேசனே வாசனே தேசனே
இரு இரு அணையாய் மீறி வருந்துயற் கணையாய்

(இரண்டாங் கள்ளன்)

விடமுண்டவாயோனே விநாயகனைப்பெற்றவனே
அடியேனெனை யாளுமன்பனே
அன்பனே இன்பனே பண்பனே நண்பனே
அமோகாரவா ஞான பராபரா வா

(முதற் கள்ளன்)

அள்ளுமணி தெள்ளுமணி துள்ளுமணியே என்ற மெட்டு.

செந்தினைப்புனக் குறத்தி கந்த நாதா என்றுந்
திருந்தினம் பாடுவோருள் ளமமர்ந்த போதா
அந்தாணுக்கே குருவாய் வந்த நீதா சிறையில்
மைந்தயன் வருந்த முன்னி ருந்த வேதா
செந்தமிழ்ச் சந்தச் சரபக் கவிப்பாதா என் மேல்
சந்ததஞ் சிந்தை கொள் சண்முக விநோதா
களவுக்கு வந்தே னென்னை நீ காட்டிக் கொடாதே முன்னை நல்
துளவுபுகல்வர பின்னே.துதி யோகப் பணிவே னுன்னை
நானுன்னை நானுன்னை நானுன்னை
உன்னை உன்னையே போற்றினேன் காவா (செ(

(இரண்டாங் கள்ளன்)

பல் மணி வேல் மணி வேல் என்ற மெட்டு.

நீ துணை செய் துணை செய் துணை செய் முருகா
சுகபதிமால் மருகா
துப்பாக்கி ரிவால்தாங்கிடுஞ் சுப்பாய்களுடன் தூங்கிட
பக்கத்தில் மேவி சொக்குப்பொடி தூவி
பார்க்கக் கடை பஜார் பஜார் காக்கப் படை யுஜார் யுஜார் (துணை

(முதற் கள்ளன்)

வந் தெனையா ளெனையா ளெனையாள் குமரா
இசபா மகிழ்சமரா
எட்டுத்திட் டும்பொட்டணங் கட்டிச்சட் டுப்புட்டுனு
எங்கெங்கும் பாரா தங்கிங்கென் சோரா
சந்தச்சரபக் குகனே செந்தமி ழாஞ் சண்முகனே (எனை

வசனம்.

இந்த · சாமிங்களை வேண்டிகினுச்சி இனியந்த நாகூர் அல்லா சாமிங்களை கொஞ்சம் வேண்டிக்கிறேன்.

எங்கும் பிரபல்யத்தமிழ் என்ற லாவணி மெட்டு.

கப்பலபாயங்கண்டு கண்ணுடியை எறிந்த காதரவு லியாவே
கற்றவர் நாவே மற்றவர் பாவே
பூரான்வகைக்கி காட்சியளித்த கோவே

(இரண்டாங் கள்ளன்)

சங்கப்புலவர்தொழ தங்கப்படிக்குள் வளர்சாஹுல்அமீதொலியே
சத்தியவலியே பத்தியின் கலியே
தருணமாள் தமக்குத் தருவேன் பலியே

(முதற் கள்ளன்)

தூண்டாவிளக்கெரிக்கும் ஆண்டவனேயுனதுசோதிவழியைக்கும்
நீதியை நம்பிட்டேன் ஒதிக் கிளம்பிட்டேன் [பிட்டேன்
திருட்டுக்குக் தேசம் வெளிப் புறப்பட்டேன்

(இரண்டாங் கள்ளான்)

தந்தான தந்தானமடி தந்தானக்குயிலே என்ற மெட்டு

கடற்கரை நாகூரில் வாழ் கருணையா மீரா எனக்கித்
தருமத்தைச்சீரா செய்யுன் பெருமையைப்போரா இந்த
கன்னக்கோவில் குடி இருந்து காத்தருள் தாரா கருணை
பூத்தருள் கூரா கடைக்கண் பாத்தருள் பூரா

(முதற் கள்ளன்)

தேங்காய்க்குக் கொம்பு கொடுத்தோய் தேடினேன் சலாம்துடித்து
வாடினேன் சலாம் நடித்துப் பாடினேன் சலாம் இன்று
திருடி வந்து நோக்கல் மேகா தருவேனேர் துலாம் தேடி
வருவேனென் குலாம் செய்வேன் குறைவிலாதெலாம்

(இரண்டாங் கள்ளன்)

தபகுண நபிகள் போற்றுஞ் சர்குல மீதே குடிகொனெ
ஞகுல மீதே துடியுடன் காகுலமீதே இது
சமயமார்க்குந் தட்டுப்படாமல் சாருமிப்போதே துணை நீ
வாருமிப்போதே கிருபை தேருமிப்போதே

வசனம்.

இந்த சாமிங்களை எல்லாம் வேண்டிக்கிணுச்சி நைஞ நம்ப சில்லரை சாமிங்களை கொஞ்சம் கும்பிட்டுகிறேன்.

அடேக்கு மல்லிகை தொடுத்த என்ற மெட்டு.

மதுரை வடக்கு மொட்டை முனியாண்டி களவு செய்ய
மைந்தன் முன்னுனை வந்திரு வேண்டி இந்த
மானுக்குள் வரும் போலீசார்கள்
சேனுக்குத் தெரிந் தானுங்கையில்
மாட்டிடாது காத்தருள் புரிவாய் திருடுஞ்சத்தம்
கேட்டிடாது காவல் நீ வருவாய்.

(முதற் கள்ளன்)

குதிரைக்கார மதுரை வீரனை முன்னாளில் கள்ளர்
கொள்ளையைத் தவிர்த்த நிமனை நான்

கோரிய சிறு காரியம் நிறை
வேறிடவிந்தப் பாரிலுனக்கு
குடிக்கக் கள்ளுஞ் சாராயம் படைப்பேன் ரெத்தஞ்சொரிய
கடிக்கவாடு கோழியுங் கொடுப்பேன்.

(இரண்டாங் கள்ளன்)

பதினெட்டாம்படிக் கருப்பனே எனக்கிரவில்
பாராவாயிரும் நெருப்பனே உன்
பாதமேகெதி யாதரவெனப்
பூதலமிதி லேதா நித்திட
பக்க மக்க முக்கில் நின்றிடு வந்தே எனேப்பி
டிக்க நிக்குந்திக்கில் வென்றிடு.

(முதற் கள்ளன்)

மதுரை வடவாசல் என்ற லாவணி மெட்டு

பாண்டி மதுரை வாழ் முனியாண்டி பட்டப்
பகலில் களவுசெய்ய உனே வேண்டி
பட்டைசாராயமுங் கள்ளு ரொட்டிக்கறி யோடுனக்கு
படைத்திடுவேன் றுணே யிரும்பாண்டி பம் பம் பள

(இரண்டாங் கள்ளன்)

மதுரை பதினெட்டாம்படிக் கருப்பே பத்தி
மார்க்க முள்ளவர் மனக்குடி யிருப்பே
மாசினமவல்கடலே வாசனேச்சு ருட்டுகளும்
மகிழத்தருவேனின்று உன் பொறுப்பே டிண் டிண் டிண

(முதற் கள்ளன்)

காசி ராஜன் குமாரவீரா என்றன்
கருத்திற்கிசையுங் கன்னக் கோல் நேரா
கணக்கில்லாதாடுகோழி உனக்குப் படைத்திடுவேன்
கருணேயுடன் வருவாய் பாரா கக் கக் கட

வசனம்.

எல்லா சாமிங்களேயும் கும்பிட்டாச்சி ராஜா இனிமே நம்ப பெருமையைக் கேளுங்க சாமி சொல்லுக்கிறு வாறேன்.

சதுரகிரி மலையருகே என்ற மெட்டு

என்னைப்போலே களவில் கெட்டி எங்கினுமே இல்லை எனக்
கெவர்களுமீடில்லை என் னெண்ணமெலாந் தொல்லை என்னை
எவராகிலும் பிடிக்க வந்தா லுடைத்திடுவேன் பல்லை

(இரண்டாங் கள்ளன்)

இருப்பு கட்டடம் பெரி தென்றாலும் ஏறிடுவேன் மெள்ளே செய்
வேனென்னாளுங் கொள்ளை நா னெவர்களுக்கும் பிள்ளை கண்
டெவராகிலுந் துரத்தி வந்தா விறங்கிடுவே னுள்ளே

(முதற் கள்ளன்)

பார்த்திருக்க முடிச்சவிழ்த்து பம்பிடுவேன் பேசி முன்
பளிச்சென பொடி வீசி வெளி பகட்டிய பரதேசி அதைப்
பார்த்தவர்கள் உணர்ந்து வந்தால் பதுங்கிடுவேனெசி

(இரண்டாங் கள்ளன்)

கருங்கல் கட்டடமாகினுமென் கன்னக்கோலுக்கிணையா முனை
கத்திகளிதற்கிணையா இந்த காந்தத்தைப் போல்சுணையா அந்த
கந்த நாதன் றுணையைத் தவிர வந்த பேர்கள் துணையா

(முதற் கள்ளன்)

ஆண்டிப் பண்டாரம் என்ற மெட்டு

வில்லாதி வில்லன் களவில் பொல்லாத வல்லன்
எல்லோரையும் மறிப்பேன் எவ்வேளையும் பறிப்பேன்
வல்லோர்க்கை யாயுதத்தை வாங்கித் தாங்கி யோங்கி வீசும்(வி)

(இரண்டாங் கள்ளன்)

வீரதி வீரன் திருட்டில் தீராதி தீரன்
சூராதி சூரரென்னைச் சூழ்ந்து வளைத்திடினும்
நேராகத் தேட்டைபோட்டு நெறுக்கி யொறுக்கை முருக்கை
காட்டும் (வீ)

(முதற் கள்ளன்)

கத்திவில் லம்புதடி கட்டாரி ஈட்டியினால்
குத்தி வதைத்திடினும் கொஞ்சமேனென் னெஞ்சமஞ்சேன் (வி)

(இரண்டாங் கள்ளன்)

துப்பாக்கி ரிவால் வாரைத் தூளாய் பொடித்திடுதேன்
இப்பாரி லெந்தனுக்கு இணையுமேது இல்லை இல்லை (வீ)

(முதற் கள்ளன்)

சாமான்ய மானவனே என்ற மெட்டு

லேசானவனல்ல நான் லேசானவனல்ல நான்
நித்தியஞ்சுத்திப்ப ணத்தைப்ப றித்திட (லே)
ராசாவாகினும் பேசாமல் பணந்
தந்தால் சரி என்பேன் முடியா
தென்றால் மறி என்பேன் தடியாய்ச்
சென்றால் பறி பறி பறி பறி என்பேன் (லே)
கண்க்கிலாப் பெரும் பணச்செருக்கரைக்
கண்டால் கொடுவென்பேன் செருவங்
கொண்டாலடி என்பேன் மறுத்து
நிண்டாலிடி யிடி யிடி யிடி என்பேன் (லே)
அரைத்திருடனுங் கால் திருடனும்
முக்கார்த்திருடனும் யான் முதல் வரும்
பக்காத்திருடனும் யான் பதுங்கி
எக்காப் பிடி பிடி பிடி பிடி என்பேன் (லே)

(இரண்டாங் கள்ளன்)

அரே ரே ரே பக்காத் திருடனன் என்ற மெட்டு

முதல் முதல் ஒன்றும் நிம்பாடா
மூட்டை பிடுங்கிடும் வம்பனடா
அது முதலிது வரை யென்னையாரும்
அடிக்கப் பிடிக்கத் துடிக்கலை நா
ஹுஜார் உஜார் உஜார் அப்பா (முத)
என்னைக் காணக் கன்னக் கோல் துடிக்கும்
எந்தச் சுவர்களு மே வெடிக்கும்
சென்னைப் பட்டணஞ் ஜில் லா ஜெயில் சிப்பாய்கள்
சிராயென் னோராக மீறுர்கள் பாரா
வுஜார் உஜார் உஜார் அப்பா (முத)
சக்கர முலக்கை வலை தடி . சவுக்குத் தோமரம் வில் லடி
இக்கணம் பக்கத்தில் திக்கென வந்தாலும்
எப்போதுந் தப்பிப்பே னப்பப்பா ஞனிங்
குஜார் உஜார் உஜார் அப்பா (முத)
பாண்டி மதுரை முத் தமிழ்ப் ரபம்
பாவலர் மகிழ் சந் தச்ச ரபம்
வேண்டிய செனக குல திலக வித்தகன் சண்முகனைத்தினங் கூற (முத)
வுஜார் உஜார் உஜார் அப்பா

(முதற் கள்ளன்)

பேஷான ரோசாயி என்ற மெட்டு

தேட்டைக்கு முட்டைக்கும் வேட்டைக்கும் ராஜாளி
சிங்கத்திற் கென்றுநெங்குறை யேது சொல்லித்தரைமீது வழிப்
பாட்டைக்குங் கோட்டைக்குஞ் சேட்டைக்கும் பேரான
பாஷா வென்னிடத்தினிற் பேசார்கள் பதில் வீசார்கள்
வழிப்பற்றிக் கொள்ளையில் பேராக வென்றவன் உயிர்
பழிவரு மென்றதற் கஞ்சாது நின்றவன்
குழிப்பறித்தாட்களைக் கொன்றே புதைப்பவன் கெட்டச்
சுழிப்பயலென்ற நிப்பர் வாங்கி வந்தவன்
ஜனகுலகுல திலக சாப சண்முகனைப்பாட
கனகய முடனிர வினிலென் கன்னக்கோலைப் போடத்(தே)

வசனம்

ஆறு இப்போர்க் கொத்த சாமார்த்தியக்காரன் இது வரைக்கும் இன்று சம்பாதிச் சிருக்கிறே என்னு கேப்பிங்களோ?

மாதப் பாட்டு

நோண்டிச்சிந்து

மார்கழித்திருநாளாம் ஸ்ரீரெங்க
மார்க்கத்தில் கிடைத்ததை மா டுவாங்கினேன்
தைப்பூசம் பரங்கிரியில் சண்முகன்
தந்ததெல்லாங் கொண்டுபோயி வட்டியில் விட்டேன்
மாசிமா மாங்கமெனுங் கும்பகோண
மார்க்கத்தில்சம் பாதித்ததென் வேட்டித்துணிகள்
பங்குனித் தேரோட்டம் பழநிப்
பண்டாரங்கொடுத்ததெல்லாம் பாலபிஷேகம்
சித்திரைத் திருநாளாம் வைகையில்
தேட்டையிட்ட முட்டைகள் சாப் பாட்டுச்செலவு
வைகாசி மாதத்திலே திருச்செந்தூர்
வரவுக ணக்குகள் சா ருயச்செலவு
ஆனிமா தத்தின் கணக்கு வாரண்டுக்
ககப்படா மலேவீட்டில் நீட்டி நிமிர்ந்தேன்
ஆடியில் தனுஸ்கோடிக் கரையில்
அடித்துப்ப றித்தகாசை வீடுகட்டினேன்
ஆவணி புட்டபிஷேகம் மதுரை
ஆற்றில்வந்த தெல்லாமெந்தன் பெண்டாட்டி நகை

புரட்டாசி மாசத்திலே திருப்பதி
போய்ப்பெரிய ராமத்தைக் கண் டோடி வந்திட்டேன்
அர்ப்பிசி முடமுழுக்காம் மாயூரக்
கலைந்துகி டைத்தெங்க ளேஜண்டுகேட்கு
கார்த்திகை யண்ணாமலையில் தீபத்தைக்
காணச்சென்று வந்த வசூல் நஞ்சிசைப் வாங்கினேன்
இம்மாத மிங்கிட்டு வந்தேன் மன்னே
எப்படிவிட் டாளுஞ்சரி என்குல தெய்வம் (மார்)

இரண்டாங் கள்ளன்

தானனே தன்னே நன்னே நன்னே நன்னே தனன நன்னே
தானனன தானனன தனனனன தனன நன்னே
தனனனே என்ற சந்த மெட்டு.

ஞாயிற்றுக் கிழமையிலே நாகபட்டணம் திருடப்போயி
நாலு பேரைக்காத றுத்து நலுங்கிடாமல் ஓடியாந்திட்டேன்

(அஜம் தான்)

திங்கள்கிழமையிலே திருவாரூரு திருடப்போயி
சேட்டுவிட்டுநோட்டுபவுனைத்தெட்டைபோட்டுஓடியாந்திட்டேன்

(அலக்கு தான்)

செவ்வாய்க் கிழமையிலே செங்கல்பட்டு திருடப்போயி
திருடன்திருடன்பிடிஎன்றுங்கசிட்டாய்ப்பறந்துஓடியாந்திட்டேன்

அபக்கு தான்

புதன் கிழமை ராத்திரியில் புதுச்சேரியில் திருடப்போனேன்
பொல்லாத கிழவி யொருத்தி புடா என்று ஓடியாந்திட்டேன்

(அபேஸ் தான்)

வியாழக் கிழமையிலே வீரநல்லூர் திருடப்போயி
விடிய விடிய களவு செய்து விடிந்த பின்பு ஓடியாந்திட்டேன்

(அமுக்கு தான்)

வெள்ளிக் கிழமையிலே வேலூரில் திருடப்போயி
வேண்டிய மட்டும் களவு செய்து வேகமாக ஓடியாந்திட்டேன்

(அலுக்கு தான்)

சனிக்கிழமை வாரத்திலே தஞ்சாவூரில் திருடப்போயி
சரப்பளியும் பெமாராமாலையும் தாக்கிகிலு ஓடியாந்திட்டேன்

(அப்புட்டு தான்)

181084

வசனம்.

இருந்தாலும் இந்தச்சமயம் நம்பகையிலே இருக்கிற ஆயுதம் எப்பேற்கொத்தது தெரியுங்களா? கேளுங்கசாமி

சிட்டான் சிட்டான் சிட்டான் என்ற மெட்டு

சட சட சட　　சடவெனப்பொழி மழையிலே அன்று
சார்ந்த அம்மா　　வாசிருட்டோர் வழியிலே　　வெகு
தட புட வோடு　　மட மட வென
மிடி அடித்திடும்　　படிக்கிடி விழ　　(சட)
பட பட பட　　படவென்றோடி நோக்கினேன் தோண்டிப்
பார்த்தெடுத்துக் கன்னக்கோலென்றுக்கினேன் இது
பரு மலைகளை　　யொரு நொடி தனில்
கிரு கிரு வென　　அறுத்தெரிந்திடும்　　(சட)
இட திட முட　　னேபலத்தை யூட்டிடும்　　இரும்பைச்
செதரச் செதரத் தூள் படுத்திக் காட்டிடும்　　எங்கும்
கிடு கிடு கிடு　　கிடுவெனப் பயமூட்டிடும்　　நயந்து
கெஞ்சக் கெஞ்ச　　மிஞ்சுவோரை வாட்டிடும்　　வுடல்
செறுக்கினைத் தர　　விக்கி துகர
முறுக்கினில் வீட்டை　　நொறுக்கிடுமிது　　(சட)

(முதற் கள்ளன)

முதலில்லா வியாபாரக்காரன் என்ற மெட்டு

கழறுவேன் கன்னக்கோல் பெருமை கள　　வோரறிவரித னருமை
மழை பொழிந்து மின்னலொளியாட　　மாறுது அம்மாசிருள் கூட
இடிவிழுந்து முன்னம் விளையாட　　இனி தானதெந்தினங்கள் பாட
எடுத்து வெளி ஏறி　　இவ்வழியில் கோரி
அடுத்துச் சினமீறி　　ஆசைமனந் தேறி　(கழறு)

வசனம்.

இருந்தாலும் இந்தச்சமயம் எப்படியான சமயந்தெரியுமா எங்கப்பா இது ஒரு சரியான வேளை சாமி.

மாட்டுக்காரன் மகனே என்ற மெட்டில் குறில் சந்தம்

அடித்திருக்கிற ஆள் தெரியா　　தம்மாசையிருட்டு தன்னில்
பம்மாத்து திருட்டு செய்வேன்　　கைமாத்து உருட்டு இந்த

அடிமையான எனக்கெப்போதும் மாறுதப்பிறட்டு நடக்கும்
பாராமல் தாட்டு
படுத்திருக்கிற இவனை மூக்கறுப் பாராதுக் குள்ளே புகுந்து
சிராக மெள்ளே செய்வேன் போரான கொள்ளே எங்கள்
பாட்டன் பூட்டன் களவினையான் பார்த்திட்ட புள்ளே வழியைக்
காத்திட்ட சுள்ளே

(இரண்டாங் கள்ளன்)

மதுரைக்கு நேர்கிழக்கே மாரியம்மன் என்ற மெட்டு

அம்மாசி வல்லிருட்டில் இங்கு ஆரோஒரு வன்படுத்து
சிம்மாடாய் மூட்டை வைத்து இன்று சிராயு ரங்குவதால்
பம்மாத்கா யான்படுத்து நல்ல பல்டியந்தர் உல்டி செய்து
சிம்மாடை தூக்கிவர எனக்கு செரியான வேளையிது
இன்னேர வேளை மட்டும் விழித்து எழுந்திரிக்காமல் படுத்து
முன்னாலே தூங்குவது இது நான் முன் செய்த பாக்கியமே

வசனம்.

என்னமோ எங்கப்பா இங்கொரு ஆசாமி படுத்து குறட்டு விடுது நானு மெள்ள போயி பார்க்கிறேன் ராஜா.

திருடன் மூட்டையை திருடியவுடன் கைசப்தங்கேட்டு சதாரத்தைக்கண்டு வர்ணித்தல்.

தனதனு தந்தான தானனு தந்தான தானனு என்ற சந்தம்

பலே பலே பஸ்டான பொம்புளே பகட்டான பொம்புளே
இலே இலே இவளைப் போலே பொம்புளே இருப்பதைநா னம்பலே
மூக்கிலே முத்தருமை தேடுது முகத்திலொளி கூடுது
நாக்கிலே நன்முறை நின்றாடுது நாகரீகம் பாடுது
வாக்கிலே வல்லபங் கொண்டாடுது வாலிப சொல் நீடுது

மகுட வசனம்.

பார்க்கப் பதினாயிரங்கண்கள் வேண்டு மின்னே
பாவையிவள் போலுமிந்த பூவினிலே பின்னே
மூர்க்கம் பேசினாலுமிந்த மொய் குழலாள் முன்னே
முத்தமிழ் சந்தச்சரப சண்முகனை சொன்னேன் (பலே)

முதற் கள்ளன்

தந்த தந்தனு தந்தான தானனு என்ற மெட்டில் கீழ் மகுடம்

நல்ல மாமணி நைஸான பூமணி
நாட்டுபுரம் ரோட்டுக்குள்ளே ஆட்டுகிச்சி கண்மணி
வல்லப கெண்டாமணி வாலிப கெண்டாமணி

நல்லற முண்டாமணி நான் மகிழும் பெண் மணி
இவளைப்போலே பிரகாசி எங்கினுமே இல்லை
என்னைப்போலே மன்னனிவட் கே கிடைப்பதில்லை
ஜெனகல குல திலகசரப ஷண்முகந்தமிழ் பாடிட
கனநய முடனிருவரும் ஓர் கருணை பேசலைக் கூடிட (நல்ல)

## அம்மா அரசனுக்கனே என்ற மெட்டு

ஆப்ரிக்காலண்டன் ஜெர்மனி ஐரோப்பா ஜப்பான் ருஷியா
சாப்புக்கடையிலுள்ள புட்டா தினுசுகள்
சகலமும் உங்களுக்கே
தேட்டை போட்டுத்தருவேன் செந்தாமரை மலரே
வாட்டமடையாதே வாவா என்னோடு கூட
உன்னைப்போலேபாரி ஆண்டிடா உபகாரி

## (இரண்டாங் கள்ளன்)

சிங்கப்பூர் சைனு கல்கத்தா சேலம்பாம்பை டில்லி பூனு
அங்காங்கு உள்ள நகை என்ற தினுசுகள்
அம்புட்டும் உந்தனுக்கே
தேடிக்கொடுத்திடுவேன் தினம் தினமாசையுடன்
பாடிச் சுகித்திடலாம் பாராடியெனைச் கடைக்கண்
மானே மாமயிலே மரகத மேகுயிலே

## மாமயிலே மையலானேன் என்ற மெட்டு

க. பூமலரே பொற்கொடியே பொன்னே மானே
ச. நீமனங்கொள் ளாதே இச்சை வைய்ய ஞானே
க. கோமளமே கும்பிடுவேன் கோடா கோடி
ச. காமப்பேயே நாயே தூரப் போடா ஓடி
ச. தாமதஞ்செய் யாதேவந்து தாடி முத்தம்
க. வாய்மதங் கொண்டாடுவதுன் வஞ்சப்பித்தம்
க. பாடி யாடி நாடியுன்றன் பட்சங் கொண்டேன்
ச. வாடி போடி என்றுவ் வைய எண்ணங்கொண்டேன்
க. பெண்ணே வாவா ச. மண்ணே போபோ
க. பிடிப்பேன் தாவி ச. அடிப்பேன் பாவி
க. வாநீ யருமை ச. போநீ எருமை
க. சரிசொல் குட்டி ச. நெறிநில் பட்டி
க. கெஞ்சமன வஞ்சியிதேன் என்சொல்முறை தஞ்சமடி (பூ)

(முதற் கள்ளன்)

பூமலரே பொற்கொடியே என்ற மெட்டு

க. கொஞ்சுங்கிளி ரஞ்சிதமே கோரி பின் வா
ச. வஞ்சகனே சஞ்சலத்தால் துஞ்சிடுவாய்
க. கட்டிச் சீனி பாகென் றுன்னை கிட்டினேனே
ச. மட்டிப்பய லேமடையா திட்டினேனே
க. வெட்டியி லுனைவிடுத்துப் போவேனோயான்
ச. சட்டிச்சுரண் டியுனக்குத் தகுமோ சொல் நான்
க. கெட்டித்தனம் பேசுவதுங் கேள் பழுதே
ச. சுட்டித்தனஞ் செய்யாதேசொன் னேன் கழுதே
க. துதிப்பேன் மயிலே ச. உதைப்பேன் பயலே
க. சரியோ விடுவாய் ச. வெறியா கெடுவாய்
க. பதில் சொல்லாதே ச. எதிர் நில்லாதே
க. தயவினுமில்லையா ச. பயமுனக்கில்லையா
க. தையலேநின் மையலதாலேபோமனம் நையுதடி (கொ)

இரண்டாம் கள்ளன்)

மன மயிலமிட்டே தன தேசபட்டே என்ற மெட்டு.

க. மாமயிலே மகிழ் பூமயிலே நாம் மருவிபாடுவோங்கூட்டா
ச. பாமரனேபரவாபரனே முன்பதுங்கிச் செய்வதென் ஜாட்டா
க. மாதரசே இந்தவாது கனேன் நீ மலைத்திடாது வாஜோக்கா
ச. பாதகனே இதுன் சாதகமோபோ பழியிலாவை நீ தாக்கா
க. பஞ்சபாவ முனக்கில்லையா
ச. சீ வஞ்சவார்த்தை ஏன் புலையா
க. நான் மெத்தக் கெஞ்சினேன் வாவா
ச. தலை பித்தமிஞ்சுதோ போவாய்
க. உனைவிட்டுப் போவேனோ குயிலே
ச. கதிகெட்டுச் சாவை நீ பயலே
க. இது கேவலமாமின் னோவியமேஎன்குவல் தீர்க்கவாராயிட்டா

(முதற் கள்ளன்)

தெம்மாங்கு மெட்டு.

க. அன்ன நடையழகே அமிர்தம்போற் சொல்லழகே
தென்னம் பூப் பல்லழகே சித்தமிரங்கித்தினமே
தில்லாடாங்குடாங்கு—உனைத்
தேர்ந்தெடுத்தேனிங்கு
ச. கோணைத் தலையழகா கொம்பேரி மூக்கழகா
பானை வயித்தழகா பார்த்திடுவாய் வந்தவழி
பலித்திடாதுன்னெண்ணம்—நீ

பரதவிப்பாய் திண்ணம்

க. உடுக்கை இடுப்பழகே உருண்டை முகத்தழகே
திடுக்கெனச் சொல்வதெலாம் தேன்போலினிக்குதடி (தி.)

ச. மரக்கால் தலையழகா மண்வெட்டிக் காதழகா
சுரக்காய் முகத்தழகா சுருசுருப்பைக் காட்டாதே (பளி)

(இரண்டாங் கள்ளன்)

க, பொட்டுச் சவ்வாதழகி பொன்னுருங்காதழகி
கிட்டைமீன் கண்ணழகி சேரவாடி நேரமாச்சு
இல்லாடாங்குடாங்கு மனந்
தேர்ந்து கருணையோங்கு

ச. நெட்டேணிக் காலழகா நெடுமரம்போற் கையழகா
எட்டாத கனி தனக்கு ஏப்பமிட்டாலாப்படுமோ
எருமை மாடே போடா — வயி
றெரியுதே நீர் மூடா

க. கூந்தல் சிங்காரத்திலே கொண்டேனென் னெண்ணமெலாம்
சாந்த முகவாயடி கைமேலே என்னையாதே (தில்லா)

ச. கோடாலிப்பல்லழகா கோழி முட்டைக் கண்ணழகா
சூடான வார்த்தைகளைச் சொல்லாதே விலகியப்பால் (எரு)

---

வாழி விருத்தம்

ஐங்கரன் வல்லபையுடைய மம்மையுடன் வாழி
கங்கய னோடு வாணி பைந்தமிழ் தேவன் வாழி
சங்கர னுமையினோடு சண்முகன் [illegible] வாழி
பொங்கிய மங்களமே பூவிலென் றென்றும் வாழி.

—— : o : ——

முற்றிற்று.

18/084

இதின் 2ம் பாகம் அச்சிலிருக்கிறது கூடிய சீக்கிரம் வெளிவரும்

ஷை யாரியற்றிய மன்மதன் எரிந்தகட்சி கேள்விலாவணி விலை அ 6

ஷை யாரியற்றிய பக்தியானந்தக் கீர்த்தனைகள்

இரண்டாம் பாகம் விலை அணா.

18/084

வெளியாகிவிட்டன!! வெளியாகிவிட்டன!!

முத்தமிழ்க்ஷேத்திர வித்துவரெத்தினம்

# A. S. சதாசிவதாஸ் அவர்களால்

இயற்றப்பெற்ற புஸ்தகங்கள்.

---

இந்து தேசாபிமானிகள்.

## ஸ்ரீ விய செந் தமிழ்த் திலகம்.

இரண்டு பாகங்கள் ஒருங்கமைந்ததும் பாரதமாதா, மகாத்மா காந்தி, திலகர் முதலியோர் திருவுருவ போட்டோ படங்களுடன் கூடியதுமான புதிய பெரிய புத்தகம் விலை அணா. 8

| | | |
|---|---|---|
| பார்வதி சத்தியவான் சாவித்திரி (முதற்பாகம்) | அணா | 4. |
| ஷை ஷை (2ம் பாகம்) | அணா | 4. |
| சுப்பிரமணியர் பாலபிஷேக காவடிசிந்து | பைசா | 6. |
| கலியுக அவதார காந்திமஹான் திலகரத்னகரம் | ,, | 6. |
| புருஷன் பெண்டாட்டி தர்க்க வேடிக்கைபாட்டு | ,, | 6. |
| பறையன்பாட்டு கலிகாலபாட்டும் சேர்ந்தது | ,, | 6, |
| பழனி ஆண்டிபண்டாரம் பாட்டு | ,, | 6. |

பக்தி ஆனந்தத்திரட்டு என்ற கீர்த்தனைகள் (அச்சில்)

முத்தமிழ் க்ஷேத்திர

எம். இ. எம். **பாஸ்கரதாஸரவர்களியற்றிய**

| | | |
|---|---|---|
| அற்புத நூதனக்காவடிசிந்து | விலை அணா | 1 |
| புதிய பக்திரஸக் கீர்த்தனங்கள் (முதற்பாகம்) | ,, | 4 |
| ஷை ஷை (2ம் பாகம்) | ,, | 4 |
| ஷை ஷை (3ம் பாகம்) | ,, | 4 |

த. கிருஷ்ணசாமி பிள்ளை & பிரதர்,

புத்தக வியாபாரம், மதுரை.

வெளியாகிவிட்டது !!        வெளியாகிவிட்டது !!

புலவர்கள் புகழப்பெற்ற

மு. பொ. தங்கய்யா அவர்களியற்றிய

# நூதன பக்திரஸக் கீர்த்தனங்கள்

இரண்டாம் பாகம்

முக்திக்காக சதா துதித்துப்பக்திபுரிவோர்களுக்கும் பாடலிற் சிறந்த நாடக பிரியர்களுக்கும் இன்பம் விளைவிக்கும் தற்கால நாகரீக வர்ணமெட்டுகளிலமைந்தபாடல்களடங்கியது. விலை 0-4-0

# கலியுகமகத்துவ காலக்கியானம்

வீரபோக வசந்தராயர்கதை; இப்பூவுலகில் இனி நடைபெறும் அரிய பெரிய விஷயங்களடங்கியது. விலை 0-0-6

# புதிய அதிப்பிரசங்க விகடன்

இதுதான் படிக்கப்படிக்க திகட்டாதது எல்லாம் வெகு தமாஷான விஷயங்கள் ஓயாச்சிரிப்பைத் தரக்கூடியது விலை 0-2-0

---

தமிழ்நாடெங்கும் புகழ்பெற்றுள்ள கன்னிச்சமீன் சாரபம்

உடுமலை முத்துச்சாமிக் கவிராயரவர்கள் மாணவர்

R. K. பூமிபாலகதாஸரியற்றியவை

தேசாபிமானிகளின்

# திலகரத்தின மாலிகா

இது, படங்களுடன் சிந்தைக்கினிய செந்தமிழ் கமழும் சந்தப் பாடல்கள் நிறைந்ததும் படிப்பாருள்ளம் பரவசமாகவும், கேட்பாருள்ளம் கிளர்ச்சி மிகுக்கவும் பாடப்பாடத் திகட்டாத தேச பக்தியை தரக்கூடியது. விலை அணா 2

இந்து தேசாபிமானிகள்

# செந்தமிழ்த்திலகம்

ஆப்டோன் படங்களுடன் 57 தேசபக்தர்கள் மீது சிறந்த பாடல்களடங்கிய புதிய பெரிய புத்தகம் தபால்சார்ஜ் உள்பட விலை அணா 4

த. கிருஷ்ணசாமி பிள்ளை & பிரதர்,

புத்தக வியாபாரம், மதுரை.